# வாழ்த்துரை

பேராசிரியர் டாக்டர் சுப. திண்ணப்பன்
**சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்,**
**சிம் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்**

''இசுலாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி'' எனும் இலக்கினைக் கொண்டு வாழும் இசுலாமியத் தமிழர்கள் கி.பி.பதினேழாம் நூற்றாண்டு முதல் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய பணி தன்னிகரற்றது. ''தமிழக இசுலாமியப் புலவர்கள் அரபுநாட்டு இசுலாமியப் பண்பாட்டை, சமய தத்துவத்தைத் தமிழிலும், தமிழ்ப் புலவர்களின் மரபை, பண்பாட்டை இசுலாமியத்திலும் கலந்து இரண்டையும் ஒன்றுபடச் செய்யும் பாலமாக இலங்கினர்'' என்று இசுலாமிய இலக்கிய உள்ளடக்கத்தைப் பாராட்டித் தம் தமிழிலக்கிய வரலாற்று நூலில் பேசுகிறார் பேராசிரியர் தமிழண்ணல். மேலும் இசுலாமியப் புலவர்கள் தமிழுக்குப் புதிய புதிய இலக்கிய வடிவங்களைக் கொண்டு வந்து சேர்த்த பெருமைக்குரியவர்கள். மஸ் அலா (வினா விடை), கிஸ்ஸா (கதை கூறுதல்), முனாஜத்து (இறையருள் வேட்டல்), நாமா (வரலாறு), முதலிய இலக்கிய வடிவங்களை அரபு, பாரசீக மொழியிலிருந்து தமிழுக்குத் தந்துள்ளனர். மொழி நிலையிலும் சபாஷ், ராவுத்தன் முதலிய பல அரபு, பாரசீக, உருதுச் சொற்களைத் தமிழுக்குத் தந்து வளம் சேர்த்தனர். அரபுத் தமிழ் என்னும் மொழி நடைமுறையையும் அவர்கள் ஆக்கியுள்ளனர். இவ்வாறு உள்ளடக்கத்தாலும் உணர்த்தும் நெறிமுறையாலும், உருவத்தாலும் தமிழ் இலக்கியத்திற்கும் மொழிக்கும் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டிய ஆற்றல் பெற்றவர்கள் இசுலாமிய இலக்கியப் புலவர்கள். மராட்டிய, தெலுங்கு, கன்னடக் குறுநில மன்னர்கள், ஆங்கிலேயா் ஆட்சியில் தடுமாறி நின்ற தமிழ் மொழியைத் தலைதூக்கிவிட்ட தகைமையும் இவா்களுக்கு உண்டு. தமிழ்ப் புலவா்கள் குறுநில மன்னா்களையும் செல்வா்களையும் நாடிப் பரிசிலுக்காகச் சிற்றின்பம் தொடா்பான சிற்றிலக்கியம் பாடிய காலத்தில் இறை நெறியை முதன்மையாகக் கொண்டு இலக்கியம் படைத்த பெருமையுடைய பெருமக்களாகக் இவா்கள் திகழ்ந்தாா்கள்.

இத்தகைய இசுலாமிய புலவா் வரிசையில் ஈடுஇணையற்றுத் திகழ்பவா்தான் உமறுப்புலவா் (1642-1703). இவா் இயற்றிய சீறாப்புராணம் நபிகள் நாயகம் அவா்களின் வாழ்க்கை வரலாற்றை 5027 விருத்தப் பாக்களால் கூறும் பெருங்காப்பியமாக விளங்குகிறது. அது தமிழ் இலக்கணம் கூறும் பெருங்காப்பிய இலக்கணக் கூறுகள் பலவற்றைத் தாங்கி நிற்கும் தன்மையது. நபிகள் நாயகத்தின் நாடாகிய அரபு நாட்டை வா்ணிக்கும் நாட்டுப்படலம் தமிழ் நாட்டின் இயற்கை வளத்தையே விளக்கிக் காட்டுகிறது. நகரப் படலத்தில் மெக்கா நகரம் மதுரை நகரமாகவே தோற்றம் அளிக்கிறது. எனவே உமறுப்புலவரின் தமிழ் நாட்டுப்பற்று விளங்குவதோடு பழைய தமிழ் நூல்களின் தோய்ந்த தமிழ் உள்ளமும் விளங்குகிறது. என்றும், இக்காப்பியத்தில் உவமைகளும் உருவகங்களும் அழுகுற அமைந்துள்ளன என்றும்,

''பாடல்கள் இனிய ஓசை உடையனவாய்க் கற்பவர் நெஞ்சில் இனிக்கின்றன''. என்றும் பேராசிரியர் மு. வரதராசனார் தம் இலக்கிய வரலாற்று நூலில் பாராட்டுகிறார். நபிகள் நாயகத்தின் வரலாறு கற்பனைக்கு அப்பாற்பட்டது. எனவே கற்பனையோ புனைந்துரையோ சேர்க்க முடியாத ஒரு வரலாற்று நாயகரின் கதையைச் சுவைபடச் சொல்லும் கடின முயற்சியில் வெற்றி கண்டுள்ள உமறுப்புலவரின் புலமைத் திறம் உண்மையிலேயே போற்ற வேண்டிய ஒன்றாகும். உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் அரபுமொழி அறியாத இசுலாமியத் தமிழர்க்கு அச்சமய நெறியை அறியப் பேருதவி செய்தது. சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பெருங்காப்பியங்களைப்போல் தமிழுக்குப் பெருங்காப்பியம் தோன்றாத 300 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் வாராது போல வந்தமாமணியாய் உமறுப்புலவர் தோன்றிச் சீறாப்புராணமாகிய பெருங்காப்பியத்தை இயற்றினார், மேலும் அவர் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் முதலிய கிறித்துவப் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கும் வழிவகுத்தார்.

தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சிக்கு இவ்வாறு பெருந் தொண்டாற்றிய உமறுப்புலவரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் இயற்றிய சீறாப்புராணத்தின் தோற்றம், வளர்ச்சி, சிறப்பு, உரைகள், பதிப்புகள், பாடல் நயம் முதலியவற்றையும் சுருக்கமாக எழுதி ஒரு சிற்றேடாகச் சிங்கப்பூரில் 'உமறுப்புலவர்' என்னும் தலைப்பில் வெளியிடுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். காரணம் என்ன?

சிங்கப்பூரில் குடியேறிய கடையநல்லூர் முஸ்லீம் பெருமக்கள் உமறுப்புலவர் தமிழ்ப்பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடக்க நிலையில் முதலில் உருவாக்கிப் பின் அதனை உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்த்திப் பலருக்குத் தமிழ் மொழி வழி கல்விபுகட்டிச் சிங்கப்பூரில் தமிழ்மொழி, இலக்கிய, கல்வி வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியுள்ளார்கள். இப்பள்ளிகளில் பயின்றவர்கள் பலர் இன்று சிங்கப்பூரில் ''தமிழ்க் கல்வி புகட்டும் ஆசிரியர்களாகவும் கல்வித்துறை அதிகாரிகளாகவும் கலைத்துறைத் தூதர்களாகவும் ஊடக இயலாளர்களாகவும், தொழில்துறைத் தலைவர்களாகவும் இலக்கியப் படைப்பாளர்களாகவும் ''இருப்பதை நான் உமறுப்புலவர் பள்ளி முன்னாள் மாணவர்களின் விழாவிற் சிறப்பு விருந்தினராகச் சென்ற ஆண்டு கலந்து கொண்டபோது கண்டு மகிழ்ச்சி கொண்டேன். 36 ஆண்டுகள் (1946 - 1982) தமிழ்ப் பணியாற்றிய இந்தப் பள்ளிக்கூடம் குறைந்த கால வாழ்வைக் கொண்டிருந்தாலும் நிறைந்த தமிழ்ப் பணியைச் செய்து சிங்கப்பூர்த் தமிழ் மொழி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. ''சிங்கப்பூரில் தமிழ் உயர்நிலைக் கல்வி வழங்கிய ஒரே பள்ளி என்ற பெருமை மட்டுமின்றித் தென்கிழக்கு ஆசியாவிலேயே உருவான முதல் தமிழ் உயர்நிலைப் பள்ளி என்ற சிறப்பையும் பெற்று விளங்கிது.''

இந்த உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளி இன்று செயற்படவில்லையாயினும் ''உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்'' ''உமறுப்புலவர் கல்வி உதவி அறங்காவல் நிதியம்'' ''உமறுப்புலவர் முன்னாள் மாணவர் சங்கம்'' என்னும் அமைப்புகளின் வாயிலாகச் சிங்கப்பூரில் உமறுப்புலவரின் நினைவைப் போற்றியவண்ணம் நாம்

இருக்கிறோம். இந்த அமைப்புகளில் உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையம் தமிழ்மொழிப் பாடத்தைத் தக்க தமிழாசிரியர்கள் வழி பயிற்றுவிக்கும் பள்ளியாகவும், தமிழ்க் கல்வியை மேம்படுத்த உதவும் வளமை நிலையமாகவும், தமிழாராய்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் நூலகம் ஒன்றைக் கொண்டதாகவும் கல்வி அமைச்சின் நிர்வாகத்தில் இயங்கிவருகிறது. அறங்காவல் நிதி கடந்த 25 ஆண்டுகளாக 200க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மேல் நிலைக் கல்வி கற்க உதவி நிதி வழங்கி வந்துள்ளது. முன்னாள் மாணவர் சங்கம் பழைய மாணவர்களை ஒருங்கு இணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் உமறுப்புலவர் பற்றிய செய்திகளைச் சிங்கப்பூர்த் தமிழர்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வேடு உதவும் என்பதில் ஐயமில்லை. மேலும் சிங்கப்பூர் உமறுப்புலவர் தமிழ்ப் பள்ளிகளின் தோற்றம், வரலாறு, சாதனைகள் பற்றியும் சுருக்கமாக இந்நூல் இயம்புகிறது. சிங்கப்பூர்த் தமிழர்கள் மட்டுமல்லாது ஏனைய பிறமொழிச் சிங்கப்பூரரும் உமறுப்புலவர், உமறுப்புலவர் பள்ளி பற்றி அறிய உதவும் வகையில் மிகக் சுருக்கமாக ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியது. இந்தக் சிற்றேட்டினை உமறுப்புலவர் அரங்க விழா ஒன்றினை நம் குடியரசில் ஆண்டுக்கொருமுறை நடைபெறும் தமிழ்மொழி விழாவினை ஒட்டி நடத்தும் விழாவில் வெளியிடுவதும் போற்றுதற்குரியது. இத்தகைய பணிகளில் ஈடுபட்ட சிங்கப்பூர்க் கடையநல்லூர் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள், உமறுப் பள்ளி முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். உமறுப்புலவர் புகழ்பரப்பும் பணி தொடர்ந்து நடைபெற இறைவனை வேண்டுகிறேன்.

''பாலமுதம் இளம்பிறையில் வடித்தெடுத்துப்

பசுந்தமிழாம் தேன் கலந்து சீறா என்னும்

மூலஒளிக் கிண்ணத்தில் ஏகதெய்வ

முறை மணக்கச் செய் உமறுப்புலவர் வாழ்க''

- முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்
  நூல். பக் - 89

சிங்கப்பூர் சுப.திண்ணப்பன்

20.03.2013